TAMIL NADU LEGISLATURE
1 - OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Public Relations Wing inoffi of Inspector-General of Police.

* 309 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any Public Relations Wing has been set up at the office of the Inspector-General of Police, Madras City, and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அடிஷனல் உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியுமான ஒருவர் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்தில் 1969 டிசம்பர் 22-ம் நாள் முதற்கொண்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பொது ஜனத் தொடர்பு அதிகாரி என்னும் பதவி ஏற்படுத்தப்பட்டு அதில் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதனால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ், போலீஸ் கமிஷனர் ஆகியோரைப் பார்க்க வரும் சாதாரணப் பொதுமக்கள் அந்தக் குறிப்பிட்ட பொதுஜனத் தொடர்பு அதிகாரியை மட்டும் பார்க்குமாறு பணிக்கப்படுகிறார்களா ? ஆம் எனில், ஐ.ஜி., போலீஸ் கமிஷனர் போன்ற பெரிய அதிகாரிகளை நேரில் பார்த்துக் குறைகளைக் கூறவேண்டும் என்று வருகிறவர்களுக்கு இனியாவது பேட்டி கிடைக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவர்கள் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயங்களை இவர்களே பார்ப்பார்கள். ஐ.ஜி. போன்றவர்களைப் பார்க்க வேண்டுமானால் அதற்கும் வழிவகுப்பார்கள்.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether there is any register kept in that office to show the number of Visitors veceived by this officer ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த விவரம் இல்லை. அப்படி அதுபற்றி ரிஜிஸ்தர் ஒன்று வைத்திருக்கக்கூடும்.

திரு. என். கிட்டப்பா : இதுபோல் ஒவ்வொரு ரேஞ்சிலும் டி.ஐ.ஜி. அலுவலகத்திலும் ஓர் அதிகாரி நியமிக்கப்படுவதற்கான யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது தேவைப்படுகிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு முடிவெடுக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, 'போலீஸ்' என்றால் கொஞ்சம் அச்சம் இருக்க வேண்டும் மனத்திலே. இப்படி ரொம்பவும் அதிகமாகப் பொதுமக்களிடத்தில் தொடர்பு கொண்டால் அந்த அச்சம் எடுபட்டுப் போகிறது. ஆகவே, அந்தத் தொடர்பை ஓரளவு நிறுத்திவிடுவதுகூட நல்லது என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

THIRU K. VINAYAKAM : What exactly are the functions of this Public Relations Officer ? Is he just to act as a Post Office to receive petitions and then forward them to the concerned authorities ? Or, is he empowered to take any decision on papers on which he is not entitled to take a decision ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்திரிகைகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும், வகுப்புக் கலவரங்கள், பிற நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப்பற்றிய அதிகாரபூர்வமான செய்திகளை வெளியிடவும், பொதுமக்களின் கோரிக்கைகளை நேரில் பெற்றுக் கொள்ளவும் போன்ற காரியங்களுக்காக அவர்கள் பயன் படுகின்றார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் இப்படி அதிகாரிகள் நியமிக்கப்படுவது இயலாது என்கிற காரணத்தினால் ஆங்காங்கு புகார்ப் பெட்டிகள் வைக்கவேண்டும் என்ற யோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை இருந்திருக்குமானால் அதை மீண்டும் பரிசீலிக்கச்சொல்லி, அதற்கு ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கும்.

Duty Officer in Secretariat.

* 310 *Q.*—THIRU K. VINAYAKAM
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR

Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have introduced a new system of nominating an I.A.S. Officer as 'Duty Officer' in Secretariat Buildings to attend to matters of 'Important and Emergent' nature ; and

(*b*) when this system comes to effect ?